அகம் 5 புறம் 5
புதுமைப் பயணம்
புறம் 3
(ஆழ்ந்து சிந்திக்கலாமா)



**ஆழ்ந்து சிந்திக்கலாமா? Shall we think deeply?!**

ஆழ்ந்து சிந்தித்தல் அவசியமா? வேகமான உலகம் இது. ஓடிக்கொண்டே இருக்கிறோம். பிரச்சனை என்று ஒன்று வந்துவிட்டால்? அதை எங்கனம் தீர்ப்பது? ஆற அமர்ந்து யோசிக்க நேரமில்லாததுபோல் தோன்றுகின்றது. ஓடிக்கொண்டே இருந்தால் விடை கிடைத்துவிடுமா? ஓட்டத்திலும், பரபரப்பிலும் சற்றே இடைவெளி விட்டு சற்றே அமர்ந்து ஆழ்ந்து யோசிப்பது அவசியமாகின்றது. ஆக ஆழ்ந்து யோசித்தல் ஒரு பிரச்சனைக்கு வழிவிடும் என்றால் ஆழ்ந்து யோசிக்கும் திறனைக் கற்றுக்கொள்ளலும் அவசியமாகின்றது.

அநேக நேரங்களில் நான் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருப்பது போலத் தோன்றினாலும் 99 சதவீதம் அடுத்த வேளைக்கு சாப்பிடுவதற்கு என்ன என்று தான் நான் யோசித்துக்கொண்டிருப்பேன். ஆனால் இந்த சிந்திக்கும் திறன் தான் மனிதனை மிருகங்களிலிருந்து வேறுபடுத்திக் காண்பிக்கின்றது. வருங்காலத்தில் உயிர் வாழ, உயிர் பிழைக்க, சிறந்து விளங்க, வெற்றிபெற மற்றும் கற்றுக்கொள்ள சிந்திக்கும் திறன் மட்டுமே உதவும்.

நீங்கள் இந்த அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கின்றீர்கள். உங்களிடம் அசைவுள்ளதா? இல்லை. ஆனால் நீங்கள் உட்கார்ந்திருக்கும் இந்த பூமி அசைவற்று இருக்கின்றதா? அல்லது சுழன்று கொண்டிருக்கின்றதா? அப்படி என்றால் எவ்வளவு வேகம். பூமி மணிக்கு 1560 கி.மீ வேகத்தில் சுற்றிக்கொண்டிருக்கின்றது. அது உண்மையென்றால் உங்கள் வேகம்? மணிக்கு 1560 கி.மீ தானா? பூமி சுழல்வது மட்டுமல்ல சூரியனை சுற்றிக்கொண்டும் வருகின்றது. அப்படியென்றால் அந்த வேகம் என்ன? ஒரு மணிக்கு 1,07,000 கி.மீ. அப்படியென்றால் உங்கள் வேகம் இப்பொழுது எவ்வளவு? 1,08,560 கி.மீ இந்த பூமி உள்ள சூரிய மண்டலம் அசைவற்று இருக்கின்றதா? அல்லது அதுவும் அது இருக்கும் பால்வெளியில் பயணித்துக் கொண்டிருக்கின்றதா? ஆம் மணிக்கு 8,28,000 கி.மீ வேகத்தில் அது பயணித்துக் கொண்டிருக்கின்றது. இப்பொழுது உங்கள் வேகம் என்ன? 9,36,560 கி.மீ. ஆக உங்கள் வேகம் இவ்வளவு தானா? இல்லை இல்லை சூரிய மண்டலம் அது இருக்கும் பால் வெளியில் சுற்றி வர, அந்த பால் வெளியும் அண்ட சராசரத்தில் சுற்றி வர உங்கள் வேகம் கூடிக்கொண்டே போகிறதல்லவா? அமைதியாக இங்கு நாம் அமர்ந்திருக்கிறோம். ஆனால் அசுர வேகத்தில் பயணித்துக்கொண்டிருக்கிறோம் என்றால் அது சரிதானே. ஆக ஆழ்ந்து யோசித்தால் தானே பிரச்சனை. ஆழ்ந்து யோசிக்காது இருந்து விடுவோமா? மற்றுமோர் சிறிய கேள்வி உங்களுக்குள்ளேயே கேட்கலாம். நான் யார்? ரத்தமும், தசையும், எலும்பும் உள்ள உடலா? அல்லது நான் யார் என யோசித்துப் பார்க்கும் மனமா? யோசித்து தெளியும் அறிவா? இந்த உள்முக சிந்தனை பயன் தருமா? நான் ஏன் உயிர் வாழ்கிறேன். என் வாழ்க்கைக்கு அர்த்தம் ஏதும் உள்ளதா? நான் செய்யப்போவது என்ன? வெந்ததைத் தின்று வெறுவாழ்வு வாழப் போகின்றேனா? அல்லது பாரதி பராசக்தியைப் பார்த்துக்கேட்டது போல



தேடிச்சோறு நிதந்தின்று பல சின்னஞ்சிறு கதைகள் பேசி

மனம் வாடித்துன்பமிக உழன்று பிறர் வாடப் பல செயல்கள் செய்து

நரைகூடிக் கிழப் பருவம் எய்தி கொடுங்கூற்றுக்கிரையெனப் பின் மாயும்

பல வேடிக்கை மனிதரைப் போல வீழ்வேன் என நினைத்தாயோ

என்று நீங்களும் ஒரு விந்தை மனிதன், தனித்துவம் மிக்கவன் எனக்கூறப் போகின்றீர்களா? இந்த மாதிரி எண்ணங்கள் வருவது ஆழ்ந்து சிந்திப்பதால் தானே. பல பேர் இதுபோல ஆழ்ந்து சிந்தித்ததால் தான் மனிதகுலம் பலன் மிக பெற்றிருக்கின்றது. கெட்டிலில் வரும் நீராவியைப் பார்த்து அதைப்பற்றி ஆழ்ந்து சிந்தித்ததால் தானே ஜேம்ஸ் வாட் அவர்களால் நீராவி என்ஜினைக் கண்டறிய முடிந்தது. நாமும் புகைவண்டி மூலம் பல இடங்களுக்குப் பயணிக்க முடிந்தது. எங்கேயோ நடக்கும் விஷயங்களை என்வீட்டு வரவேற்பறையில் அமர்ந்து பார்க்கமுடியுமா என்ற பேர்டின் ஆழ்ந்த சிந்தனை மனிதகுலத்திற்கு தொலைக்காட்சிப் பெட்டியைப் பெற்றுத் தந்தது. சிக்மன்ட் பிராய்டின் ஆழ்ந்த சிந்தனை மனித உறவுகளில் ஏற்படும் சிக்கல்களை விடுவிக்க பெரிதும் உதவியாக இருந்தது அல்லவா? ஒவ்வொரு துறையிலும் ஒரு சிலரின் ஆழ்ந்த சிந்தனை தானே பல்வேறு கண்டுபிடிப்புகளை நமக்கு வழங்கியுள்ளது. ஹாக்கி விளையாட்டில் எப்படி இந்தியா இந்தளவிற்கு சிறந்து விளங்குகிறது? அதை எப்படித் தோற்கடிப்பது என்பது பற்றிய ஐரோப்பிய நாடுகளிடையே ஏற்பட்ட ஆழ்ந்த சிந்தனை தானே செயற்கைப் புல்வெளி மைதானம் வருவதற்குக் காரணமாக அமைந்தது. அந்த விளையாட்டும் திறன் முக்கியத்துவம் தாண்டி வேகம் உடல் திறன் போன்ற வேறுபல முக்கியத்துவங்களை நோக்கிச் சென்றுவிட்டது. மேலும் இதுவரையில் விட்ட முதலிடத்தைக் கைப்பற்றவே முடியவில்லையே.

ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டும் தத்துவார்த்தமான கேள்விகள் சிலவற்றைப் பார்ப்போம்:

1. காற்றுக்கு வாசம் உண்டா?
2. நாம் இந்தக் கணத்தில் வாழ்ந்தால் வருங்காலமும் நிகழ்காலமும் இருக்குமா?
3. புல்லில் நான் பார்க்கும் பச்சையும் நீ பார்க்கும் பச்சையும் ஒன்று தானா?
4. நான் கோடி ரூபாய் கடன் வாங்கினால் கோடீஸ்வரனா?
5. காற்றை உன்னால் பிடிக்க முடியுமா?
6. மிருகங்களுக்கு உணர்ச்சிகள் உண்டா?
7. யாருமில்லாத இடத்தில் காட்டில் மரம் விழுந்தால் சத்தம் எழுப்புமா?
8. திருடுவது எப்பொழுதும் சரியாக இருக்குமா?
9. சூரியன் சத்தம் போடுமா?
10. நிறத்திற்கு வடிவம் உண்டா?
11. ஒரே நேரத்தில் வருத்தமாகவும் சந்தோஷமாகவும் இருக்க முடியுமா?
12. கோடுபோட்ட பேப்பர் கோடுபோடாத பேப்பரை விட எடை கூட இருக்குமா?
13. ஒரு கடையில் இருக்கும் வாராந்திரியையோ அல்லது தினசரியையோ காசு கொடுக்காமல் படித்தால் அது திருட்டுக்குச் சமமாகுமா?
14. உங்கள் குடும்ப உறுப்பினர்களின் சாப்பாட்டிற்காகத் திருடுவது நியாயமா?
15. எவ்வளவு அதிகம் இருந்தால் பணக்காரன்?
16. எவ்வளவு குறைவாக இருந்தால் ஏழை?
17. கோபமாக இருக்கும் மனிதரால் சரியாக முடிவெடுக்க முடியுமா?
18. நல்ல வாழ்க்கை என்றால் என்ன?
19. கண்ணாடியின் நிறம் என்ன?
20. நாளைக்கு நிறமிருக்கிறதா?
21. பொய்கள் நல்லது செய்யுமா?
22. பொய் சொல்வது எப்பொழுதாவது சரியாக இருக்குமா?
23. உங்கள் செயல்கள் உங்கள் கட்டுப்பாட்டில் இருக்கின்றனவா?
24. ஒத்துழைப்பது நல்லதா? சண்டைபோடுவது நல்லதா?
25. எவ்வளவு பணம் உங்களை சந்தோஷத்திற்குள்ளாக்கும்?
26. சந்தோஷம் என்று ஒன்றிருக்கின்றதா?
27. சந்தோஷத்தைத் தவிர முயற்சி செய்வதற்கு வேறு நல்ல விஷயங்கள் உள்ளனவா?
28. பாதுகாப்பிற்காகச் சுதந்திரத்தை நீ விட்டுக்கொடுப்பாயா?
29. சுதந்திரத்திற்காக பாதுகாப்பை நீ விட்டுக்கொடுப்பாயா?
30. அறிவியல் என்றால் என்ன?
31. தப்பு பண்ணினால் எப்பொழுதும் சாரி சொல்லணுமா?
32. மிருகங்கள் சிந்திக்குமா?
33. மரங்கள் உணர்ச்சி வசப்படுமா?
34. மிருகங்களைக் கொல்வது நியாயமா?
35. போரை எப்பொழுதாவது நியாயப் படுத்தமுடியுமா?
36. உணர்ச்சிகள் நமக்கு எதற்காக இருக்கின்றன?
37. சட்டத்தை மீறுவது எப்பொழுதாவது சரியாகுமா?
38. நம்பிக்கை எதிலிருந்து வருகின்றது?
39. எது உண்மை?
40. ஒரு விஷயத்தை யார் உண்மை என்று நம்புவது?
41. நாம் மற்றவர்களை எப்படி நடத்த வேண்டும்?
42. உங்கள் மனம் உங்கள் உடம்பின் ஒரு பகுதிதானா?
43. உங்கள் எண்ணங்கள் உங்கள் உடம்பைக் கட்டுப்படுத்துமா?
44. மிருகங்கள் மனிதர்களாக முடியுமா?
45. கோழியிலிருந்து முட்டை வந்ததா? முட்டையிலிருந்து கோழி வந்ததா?
46. நாம் அனைவருமே சமமா?
47. உணர்ச்சிகளை தலையில் உணர்வோமா அல்லது இருதயத்தில் உணர்வோமா?
48. மீன் நீந்தக் கற்றுக்கொள்ளுமா?
49. ஒரு படத்தை வாசிக்கமுடியுமா?
50. கணிணிகள் சிந்திக்குமா?
51. ஒரு புத்தகத்தை அதன் அட்டையை வைத்து எடைபோடுவீர்களா?
52. பகல் இரவைத் தொடர்கிறதா? அல்லது இரவு பகலைத் தொடர்கிறதா?
53. ஆண்களும் பெண்களும் வித்தியாசமானவர்களா?
54. ஒரு விஷயத்தைப் பிரச்சனைக்குரியதாக்குவது எது?
55. போலீஸ் அதிகாரிகளைக் கண்காணிப்பது யார்?
56. இன்று நல்லது என்று சொல்லப்படுவது 10 வருடங்களுக்கு முன்பும் அப்படித்தான் சொல்லப்பட்டதா? அப்படிஎன்றால் கெட்டது?
57. எந்த அளவு போதுமானது?
58. கொல்வது என்பது எப்பொழுதாவது சரி என்று கருதப்பட்டதா?
59. இயற்கை யாருக்காவது சொந்தமானதா?
60. பணம் என்றால் என்ன?
61.

**முல்லா நஸ்ருதீனும் ஒரு கை ஓசையும்:**

முல்லா அவர்கள் ஜென் துறவிகளைப் பற்றியோ, அல்லது அவர் தம் பழக்க வழக்கங்களைப் பற்றியோ ஒன்றும் அறியமாட்டார். அதனால் ஒரு சமயம் முல்லா அவர்கள் தன் நண்பர் ஒருவர் மூலம் வாய்ப்புக் கிடைக்கப் பெற்று அமெரிக்கா சென்று ஜென் துறவிகள் அடங்கிய கூட்டம் ஒன்றில் ஆர்வத்துடன் கலந்து கொண்டார். ஜென் புத்தமத தத்துவத்தைப் பற்றி அவருக்கு எதுவும் தெரியாது. அப்பொழுது தான் ஜென் துறவிகளைச் சந்திக்கிறார். அவர் நண்பரும் முல்லாவிடம் ஜென் துறவிகளும் சுபி துறவிகளைப் போல் தான் என்றார். கூட்டத்தில் ஜென் துறவிகளின் தலைவர் முல்லாவிடம் ஒரு கை ஓசை எப்படி இருக்கும், மேலும் அதைப் பற்றி தியானம் செய்யுமாறும் கூறினார். மேலும் ஒரு கை ஓசை எப்படி இருக்கும் என்று முல்லாவிடம் மாலை கேட்டுக்கொள்வதாகக் கூறினார்.

முல்லாவிற்கோ ஒரே குழப்பம். ஒரு கை தட்டினால் எப்படி ஓசை வரும். ஒருவேளை கேள்வியை நாம் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையோ என்று எண்ணி அருகிலமர்ந்திருந்தவரிடம் அதைப் பற்றி வினவினார். அவரோ ஒரு கை ஓசை என்பது ஒரு புதிர் மேலும் ஜென் புதிர்களுக்கு ஒன்றிற்கு மேல் விடைகள் இருக்கும். சிந்திப்பவர் விழிப்புணர்வடைய, முக்தியடைய இப்படிப்பட்ட புதிர்கள் உதவியாக இருக்கும் என்றார். முல்லாவிற்கு ஒன்றும் புரியவில்லை. நண்பகலும் வந்தது. மதிய உணவு பறிமாறப்பட்டது. முல்லாவிற்கோ பசியே இல்லை. மாலைப்பொழுதும் வந்தது. துறவிகளின் தலைவரை முல்லா சந்தித்த பொழுது அவர் ஒரு கை ஓசை எப்படி இருக்கும் என்றார். முல்லாவோ சற்றே குனிந்து தலைவரின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். தலைவரோ என்ன, என்னை அவமானப் படுத்துகிறீர்களா என்று கேட்டார். முல்லாவோ இல்லை இல்லை என்னைக் கேட்கும் பொழுது தாங்கள் தூங்கிக்கொண்டிருந்தீர்கள். என் ஒரு கை ஓசை தான் உங்களை எழுப்பியது என்றார்.

மேலே கூறப்பட்டுள்ள கதை பற்றி உங்கள் கருத்து(பின்வரும் மூன்று விடைகளில் உங்களுக்கு மிகவும் பொருத்தமாகத் தோன்றுவதைத் தேர்ந்தெடுக்கவும்)

19. மேம்போக்காகச் சிந்தித்தால் விடை கிடைக்காது
20. ஆழ்ந்து சிந்தித்தால் ஒரு பிரச்சனைக்கு விடைகிடைக்கும்.
21. ஒரு பிரச்சனைக்கு ஒரு தீர்வு மட்டும் இல்லை.

**கதையிலிருந்து அனுபவப்பாடம்**

19. இது மாதிரியான உங்களது சொந்த அனுபவத்தைப் பகிரவும்.
20. ஆழ்ந்து சிந்திப்பது என்பது ஒரு அரிதான செயலாகக் கருதப் படுகிறது என்பதைப் பற்றிப் பகிரவும்.
21. உங்களுக்கு தெரிந்த ஒருவரின் இதுபோன்ற அனுபவத்தைப் பற்றிப் பகிரவும்.

**கதையிலிருந்து நாம் தெரிவது**

22. நான் எந்த அளவிற்கு ஆழ்ந்து சிந்திக்கிறேன்?
23. ஒரு பிரச்சனைக்கு பல தீர்வுகள் இருப்பதை உணர்ந்திருக்கின்றேனா?
24. ஆழ்ந்து சிந்திப்பதற்குத் தடையாக இருப்பது என்ன?

**ஆழ்ந்து சிந்தித்தல் என்றால் என்ன?**

மனம் ஒரு குரங்கு மனித மனம் ஒரு குரங்கு. அதைத் தாவ விட்டால் விட்டு ஓட விட்டால் என்ற ஒரு சினிமாப் பாடல் எனக்கு நினைவிற்கு வருகின்றது அர்த்தமில்லாத சிந்தனைகள், எண்ணங்கள், கவலைகள், ஆசைகள். மேம்போக்கான தீர்வுகள் என்று மனம் முழுவதும் ஒழுங்கற்று அடைத்துக் கொண்டிருக்கின்றது. இதனால் சக்தியை இழப்பதோடு மட்டுமல்ல அடுத்த கட்ட விழிப்புணர்விற்கு செல்லவோ வாழ்வின் பற்பல புதிர்களை ஆய்வதிலிருந்து தடுத்துவிடுகின்றது. ஆழந்து சிந்திப்பதற்கு முதல்கட்டத் தடை இவைகள் தான். ஆழ்ந்து சிந்திக்கும் வழக்கமும் நமக்கில்லை. ஆழ்ந்து சிந்திப்பது என்பதே நமது எண்ணங்களின் மதிப்பையும் உபயோகத் தன்மையையும் கூட்டுவது தான். மதிப்புமிக்க, உபயோகமான எ ண்ணங்கள் நமது செயல்களின் மதிப்பையும் உபயோகத்தையும் கூட்டிவிடுகின்றன. சாதனைகள் படைக்கப்பட்டதும் சாதனையாளர்கள் உருவானதும் இந்த ஆழ்ந்து சிந்திக்கும் திறனால் தான்.

ஆனால் மனம் சாதாரணமாக தனது கட்டுப்பாட்டை விட்டுவிடாது. ஆக ஆழ்ந்த சிந்தனைக்குச் செல்லத் தொடர்ந்த மற்றும் தொடர்ச்சியான முயற்சிகள் தேவை. ஆழ்ந்த சிந்தனையை மேம்படுத்த யுக்திகள் ஏதேனும் உள்ளதா? வாங்க பார்க்கலாம் ஒன்றன் பின் ஒன்றாக.

1. ஆர்வமின்மை :

எண்ணங்கள் கவனிக்கப்பட்டால், வரவேற்கப்பட்டால், அசைபோடப்பட்டால் மிகுந்த பலம் பெற்றுவிடும். பொதுவாவே நமது எண்ணங்கள் வழக்கமானதாகவும், அருவருப்பாகவும். அசிங்கமாகவும், சுயநலமிக்தாகவும் சில பல நேரங்களில் எதிர்மறை சிந்தனையுடையதாகவும் இருந்துவிடுகின்றன. ஆகவே அவைகளை வேண்டாத விருந்தாளியாக நடத்துங்கள். உங்கள் கவனத்தைச் செலுத்தாதீர்கள். பை பை என்று வழியனுப்பிவிடுங்கள்.

**2. உடல் பற்றிய பிரக்ஞை:**

நம்முடைய இயல்பைத் தெரிந்து கொள்ள ஆழ்ந்த சிந்தனைக்குச் செல்ல நமது உடம்பைப்பற்றிய புரிதல் அவசியம். இதில் மூன்று நிலைகள் உள்ளன. அவைகளில் சரிவரக் கவனம் செலுத்தினால் மனம் அமைதிப்படும் மேலும் ஆழ்ந்த மற்றும் உயர்ந்த சிந்தனைகளுக்கும் வழிவகுக்கும்.

**அ.கூடுதல் சக்தி:**

நமது அறிவு, விழிப்புணர்வு, உள்முகமாகப் பார்ப்பது போன்றனவற்றிற்கு உடலின் சக்தி அவசியம். அதிகமான அறிவிற்கு, அதிகமான விழிப்புணர்விற்கு அதிக அளவு சக்தி தேவைப்படுகின்றது. உடலின் செயல்பாடுகள் வழியாக தேவையின்றி சக்தி வீணாவதைத் தடுப்பது உடலின் சக்தியை அதிகரிக்க வழிவகுக்கும். தசை உளைச்சல், தவறான தோற்றம், ஓய்வின்மை, எரிச்சல், தேவையற்ற அங்க அசைவுகள் உடலின் சக்தியை காலி செய்துவிடும்.. மேற்படி செயல்களைப் பற்றிய விழிப்புணர்வு இருந்தால் உடம்பின் சக்தியைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.

**ஆ. மனது அலைபாய்வதைக் குறைத்தல்**

விடாது பகல்கனவு காண்பது, ஒரு உபயோகமில்லாத எண்ணத்திலிருந்து இன்னொரு உபயோகமில்லாத எண்ணத்திற்கு தாவிக்கொண்டே இருப்ப போன்றனவற்றைக் குறைப்பதும் உடலின் சக்தியை அதிகரிக்கும். எப்படி உடல் அசைவுகளைக் குறைத்து சக்தியைக் கூட்டமுடியுமோ, அதுபோல மனம் அலைபாய்வதையும் தடுத்தால் உடம்பின் சக்தி வீணாவது தடுக்கப்பட்டுவிடும. மனதும் காலியாகி ஆழ்ந்த சிந்தனைக்கு வழிவிடும்.

**இ. சுய விழிப்புணர்வு:**

வாழ்வில் சாட்சியாக இருப்பது மற்றும் அந்தக் கணத்தில் வாழ்வது உங்களது முழுத் திறமையையும் உணர வைக்கும். நாம் ஏற்கனவே பார்த்தோம். உடலைப்பற்றிய பிரக்ஞை, விழிப்புணர்வு நம் சக்தி விரயமாவதைத் தடுக்க உதவுகிறது. ஆக நீங்கள் ஒவ்வொரு நொடியும் கவனமாக இருப்பது மட்டுமே உங்கள் சக்தி விரயமாவதைத் தடுக்கும். இப்படி உடலின் அசைவுகள் மீது ஒவ்வொரு நொடியும் கவனமாக இருப்பது தேவையற்ற எண்ணங்களில் மூழ்குவதையும் தடுத்து விடுகிறது. உடம்பின் சக்தியும் பாதுகாக்கப்படுகின்றது. உடலில் ஒரு சுகவீனம். வலி, திடீரென்ற உடல் அசைவுகள், மாற்றங்கள் போன்றனவற்றை சங்கேதங்களாகப் பயன்படுத்த முடிந்தால் உடல் விழிப்புணர்வு, அந்த கணத்தில் வாழ்வது போன்றன கைவசமாகும். உடல் சக்தியும் பாதுகாக்கப்படும்.

**3. தேவையற்ற ஆசைகளைத் தவிர்க்கவும்:**

உங்கள் மனம் தேவையற்ற, அற்பமான ஆசைகளைத் தவிர்த்தால் ஆழ்ந்த சித்தனைக்கு அதிக இடம் கிடைக்கும். ஆக உங்கள் ஆசைகளின் மீது சற்றே கண்வையுங்கள். உங்களை நீங்களளே சுய பரிசோதனைசெய்ய இது உதவும். நீங்கள் அடைய விரும் பும் ஆசை உங்கள் உழைப்பிற்கும் சக்தி விரயத்திற்கும் தகுதியானது தானா? ஏனென்றால் நேரம் என்பது மதிப்புமிக்கது. அதை விரயமாக்க முடியாது. இப்படி இல்லாது அற்பமான ஆசைகள் பின் சென்றால் உங்கள் மனம் அவை பற்றிய எண்ணங்களால் நிரப்பப்பட்டுவிடும்.. ஆக தேவையற்ற ஆசைகள் தவிர்ப்பது ஆழ்ந்த சிந்தனை பின் செல்ல ஒரு பாஸ்போர்ட் எனலாம்.

**ஆழ்ந்த சிந்தனை வளர்க்க சில புதிர்கள்:**

1. ஒரு கூடையில் 6 முட்டைகள் உள்ளன. ஆறுபேர் ஆளுக்கொரு முட்டையாக எடுத்துக் கொண்டனர். ஆனாலும் கூடையில் ஒரு முட்டை இருக்கின்றது. எப்படி?
2. ஒரு மனிதன் பாய்மரப் படகில் கடலில் சென்று கொண்டிருக்கிறான். தவறி கடலில் விழுந்து விடுகிறான். அவனுக்கு நீச்சு தெரியாது மற்றும் லைஃப் ஜாக்கெட்டும் அணிந்திருக்கவில்லை. அவன் விழுந்ததே மற்றவர்களுக்கு அரை மணிநேரத்திற்குப் பிறகே தெரியும். அவனைக் காப்பாற்றியதோ இரண்டு மணி நேரங்கள் கழித்துத் தான். அவன் எப்படி மூழ்காமல் இருந்தான்?
3. ஒரு மனிதன் காரில் சென்று கொண்டிருக்கும் பொழுது ஒரு வளைவில் கார் அவன் கட்டுப்பாட்டை மீறி ஒரு பள்ளத்தாக்கில் விழுந்தது. அந்தப்பள்ளத்தாக்கில் ஒரு நதி வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. காரும் தண்ணீரின் அடிப்புறத்திற்குச் சென்றுவிட்டது. அந்த மனிதன் தன் கை உடைந்து விட்டதை உணர்ந்தான். மேலும் சீட் பெல்ட்டை அவிழ்த்து வெளியே வர முடியவில்லை. இரண்டு மணிநேரங்களுக்குப் பின் தான் அவனைக் காப்பாற்றமுடிந்தது. அவன் உயிருடன் இருந்தான் எப்படி?

4. ஒரு லாரி டிரைவர் ஒரு ஒரு வழிப்பாதையில் தவறான திசையில் போய்க்கொண்டிருக்கின்றார். அதை ஒரு டிராபிக் கான்ஸ்டபிளும் பார்க்கிறார். ஆனால் அவரைத் தடுக்க முயற்சிக்க வில்லை. ஏன்?

5. 20 மாடிக்கட்டிடத்திலிருந்து தரையில் விழுந்த ஒரு குழந்தை உயிர் பிழைத்துவிட்டது. எப்படி?

6. ஒரு தீவில் மாட்டிக்கொண்டு அப்பொழுதுதான் காப்பாற்றி வரப்பட்ட ஒருவன் ஒரு ஹோட்டலில் கடல்பறவைக் கறி கேட்கிறான். ஒரு வாய் வைத்தவுடன் தற்கொலை செய்துகொள்கிறான். ஏன்?

7. மிக்கி குதிரைப் பந்தயத்தில் ஜெயிக்கிறான். ஆனால் அவனுக்குக் கப் வழங்கப்படவில்லை. ஏன்?


8. ஒரு குகை வழியே ஒரு லாரி செல்ல வேண்டி இருந்தது. ஆனால் லாரியின் உயரம் குகையின் உயரத்தை விட 1 இன்ச் கூடுதலாக இருந்தது. எப்படி அந்த லாரி அந்த குகை வழியே செல்லமுடியும்?

9. ஆறு கிளாஸ் டம்ளர்கள் வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன. அதில் முதல் 3 கிளாஸ்கள் கூல் டிரிங்ஸால் நிரப்பப்பட்டிருக்கின்றன. மற்ற 3 கிளாஸ்டம்ளர்கள் காலி யாக உள்ளன. ஏதாவது ஒரு டம்ளரை மாற்றி அந்த வரிசையில் ஒரு கூல்டிரிங்ஸ் டம்ளர் அடுத்து ஒரு காலி டம்ளர் என்று மாற்றி மாற்றி வருமாறு செய்யமுடியுமா?

10. ஒரு கறுப்பு நிற மனிதன் கறுப்பு ஆடையில் கறுப்பு முகமூடி அணிந்து கொண்டு நடுரோடில் சென்று கொண்டிருக்கிறான். அந்த நகரிலிருக்கும் தெரு விளக்குகள் அனைத்தும் உடைந்திருந்தன. நிலாவும் இல்லை. கறுப்பு நிறக் கார் ஒன்று விளக்குகள் இல்லாமல் வேகமாக அவனை நோக்கி வந்து கொண்டிருக்கின்றது. ஆனாலும் அவன் மீது மோதவில்லை ஏன்?

(விடை 8ஆம் பக்கம்)

**கேள்வி– ஆழ்ந்த சிந்தனைக்கான கருவி:**




கேள்விகள் கேட்பது சிந்தனையைத் தூண்டுவதற்கான ஒரு கருவியாகும். ஆக ஒரு பிரச்சனையைத் தீர்க்கவேண்டுமென்றால் நாம் கேட்கும் கேள்விகள் நமது சிந்திக்கும் திறனைக் கூர்தீட்டும். உதாரணத்திற்கு எதிரே ஒரு பெரிய கட்டிடம் இருக்கிறத. என்ன பார்க்கிறாய் என்ற கேள்வி கட்டிடத்தை நம்மை கவனிக்க வைக்கிறது. மற்றும் அதைப் பற்றிய நமது சிந்தனையைத் தூண்டுகின்றது. அடுத்த கேள்வியான இப்படிப்பட்ட உயரமான கட்டிடத்தைப் பற்றி என்ன நினைக்கிறாய் எனும் பொழுது அதனது நீள அகல மற்றும் உயர பரிமாணங்களைப் பற்றிய சிந்தனையைத் தூண்டுகின்றது. அடுத்ததாக இந்தக் கட்டிடம் என்ன மாதிரியான ஆச்சரியத்தைத் தருகிறது என்ற கேள்வி அதன் ஸ்திரத்தன்மை பற்றிய சிந்தனையை, இது எப்படி நிற்கின்றது என்ற ஆச்சரியத்தைக் கொடுக்கின்றது. இந்தக் கட்டிடம் பார்க்க எப்படி இருக்கின்றது? இது ஸ்திரத்தன்மையோடு நிற்பதற்கான காரணத்தை மேலும் விவரிக்க முடியுமா? திடீரென்று மவுலிவாக்கத்தில் கட்டிடம் இடிந்து விழுந்தது போல விழுந்து விடுமா? அப்படி இடிந்து விழுந்தால் என்ன ஆகும்? வேறு ஏதாவது கட்டிடத்தில் மாற்றங்கள் செய்தால் இன்னும் ஸ்திரத்தன்மையுடன் இருக்குமா? நீ என்ன சிபாரிசு செய்கிறாய். இதைப் பற்றி விளக்க முடியுமா? இந்தக் கட்டிடத்தைப் பற்றி விவரிக்க முடியுமா? இதுசம்பந்தமாக ஏதாவது உதாரணம் கூறமுடியுமா? இப்படிக் கேள்விகள் கேட்டுக்கொண்டே செல்வது ஆழ்ந்த சிந்தனையை மேம்படுத்தும். நமது அறிவை விஸ்தரிக்கும். நமது கட்டிட ஞானம் மேலும் விசாலமடையும்.

**நிறைவுரை:**

ஆழ்ந்து சிந்தியுங்கள். உங்களைச் சுற்றியிருக்கும் பிரச்சனைகள் எளிதில் தீரும். சாதனைகள் பல புரிய அவை உதவும். மேம்போக்காகச் சிந்தித்து, உங்கள் கவலைகளில் ஆழ்ந்து, அற்பமான ஆசைகளில் நேரத்தைச் செலவழித்து சக்தி தன்னை விரயம் செய்து வீணாகிவிடாமல் எப்படி ஆழ்ந்து சிந்திக்கலாம் அதற்கான சக்தியைக் கூட்டிக்கொள்ளலாம் என்பதை இன்று தெரிந்துகொண்டோம். வாழ்க நீங்கள் வளமுடன்.

**புதிருக்கான விடைகள்:**

1. ஒரு கூடையில் 6 முட்டைகள் உள்ளன. ஆறுபேர் ஆளுக்கொரு முட்டையாக எடுத்துக் கொண்டனர். ஆனாலும் கூடையில் ஒரு முட்டை இருக்கின்றது. எப்படி?

ஒரு நபர் மட்டும் கூடையோடு முட்டையை எடுத்துக்கொண்டார்

2. ஒரு மனிதன் பாய்மரப் படகில் கடலில் சென்று கொண்டிருக்கிறான். தவறி கடலில் விழுந்து விடுகிறான். அவனுக்கு நீச்சு தெரியாது மற்றும் லைஃப் ஜாக்கெட்டும் அணிந்திருக்கவில்லை. அவன் விழுந்ததே மற்றவர்களுக்கு அரை மணிநேரத்திற்குப் பிறகே தெரியும். அவனைக் காப்பாற்றியதோ இரண்டு மணி நேரங்கள் கழித்துத் தான். அவன் எப்படி மூழ்காமல் இருந்தான்?

அவன் விழுந்தது கருங்கடல். அதில் உப்பு அதிகம் என்பதால் யார் வேண்டுமானாலும் மிதக்கலாம்.

3. ஒரு மனிதன் காரில் சென்று கொண்டிருக்கும் பொழுது ஒரு வளைவில் கார் அவன் கட்டுப்பாட்டை மீறி ஒரு பள்ளத்தாக்கில் விழுந்தது. அந்தப்பள்ளத்தாக்கில் ஒரு நதி வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. காரும் தண்ணீரின் அடிப்புறத்திற்குச் சென்றுவிட்டது. அந்த மனிதன் தன் கை உடைந்து விட்டதை உணர்ந்தான். மேலும் சீட் பெல்ட்டை அவிழ்த்து வெளியே வர முடியவில்லை. இரண்டு மணிநேரங்களுக்குப் பின் தான் அவனைக் காப்பாற்றமுடிந்தது. அவன் உயிருடன் இருந்தான் எப்படி?

ஆற்றுத் தண்ணீல் அவன் நெஞ்சு உயரம் தான் சென்று கொண்டிருந்தது.

4. ஒரு லாரி டிரைவர் ஒரு ஒரு வழிப்பாதையில் தவறான திசையில் போய்க்கொண்டிருக்கின்றார். அதை ஒரு டிராபிக் கான்ஸ்டபிளும் பார்க்கிறார். ஆனால் அவரைத் தடுக்க முயற்சிக்க வில்லை. ஏன்?

லாரி டிரைவர் நடந்து சென்றுகொண்டிருந்தார்

5. 20 மாடிக்கட்டிடத்திலிருந்து தரையில் விழுந்த ஒரு குழந்தை உயிர் பிழைத்துவிட்டது. எப்படி?

அது விழுந்தது தரை தளத்திலிருந்த வீட்டின் ஜன்னலிலிருந்து.

6. ஒரு தீவில் மாட்டிக்கொண்டு அப்பொழுதுதான் காப்பாற்றி வரப்பட்ட ஒருவன் ஒரு ஹோட்டலில் கடல்பறவைக் கறி கேட்கிறான். ஒரு வாய் வைத்தவுடன் தற்கொலை செய்துகொள்கிறான். ஏன்?

அந்த விபத்தில் அவன் மனைவி இறந்து விடுகிறாள். மாட்டிக்கொண்ட தீவிலோ உணவிற்கு வழி ஏதுமில்லை. உயிர் பிழைத்த மற்றொரு நண்பன் (அல்பட்ரோஸ்)கடல் பறவைக் கறி சமைத்து வந்தேன் என்று கொடுத்து அதைச் சாப்பிட்டான். இங்கு உணவகத்தில் சாப்பிட்ட பிறகு தான் தான் சாப்பிட்டது தனது மனைவியின் மாமிசம் என்று கண்டறிந்து அதைத் தாங்க முடியாமல் தற்கொலை பண்ணிக்கொள்கிறான்.

7. மிக்கி குதிரைப் பந்தயத்தில் ஜெயிக்கிறான். ஆனால் அவனுக்குக் கப் வழங்கப்படவில்லை. ஏன்?

மிக்கி ஒரு குதிரை.

8. ஒரு குகை வழியே ஒரு லாரி செல்ல வேண்டி இருந்தது. ஆனால் லாரியின் உயரம் குகையின் உயரத்தை விட 1 இன்ச் கூடுதலாக இருந்தது. எப்படி அந்த லாரி அந்த குகை வழியே செல்லமுடியும்?

டயரிலிருக்கும் காற்றை சற்றே இறக்கி விட்டால் லாரி குகை வழியே சென்றுவிடும்.

9. ஆறு கிளாஸ் டம்ளர்கள் வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன. அதில் முதல் 3 கிளாஸ்கள் கூல் டிரிங்ஸால் நிரப்பப்பட்டிருக்கின்றன. மற்ற 3 கிளாஸ்டம்ளர்கள் காலி யாக உள்ளன. ஏதாவது ஒரு டம்ளரை மாற்றி அந்த வரிசையில் ஒரு கூல்டிரிங்ஸ் டம்ளர் அடுத்து ஒரு காலி டம்ளர் என்று மாற்றி மாற்றி வருமாறு செய்யமுடியுமா?

2ஆவது இருக்கும் டம்ளரிலிருக்கும் கூல் டிரிங்ஸை 5ஆவது இருக்கும் டம்ளரில் ஊற்றிவிட்டால் வேண்டியபடி அமைந்துவிடும்.

10. ஒரு கறுப்பு நிற மனிதன் கறுப்பு ஆடையில் கறுப்பு முகமூடி அணிந்து கொண்டு நடுரோடில் சென்று கொண்டிருக்கிறான். அந்த நகரிலிருக்கும் தெரு விளக்குகள் அனைத்தும் உடைந்திருந்தன. நிலாவும் இல்லை. கறுப்பு நிறக் கார் ஒன்று விளக்குகள் இல்லாமல் வேகமாக அவனை நோக்கி வந்து கொண்டிருக்கின்றது. ஆனாலும் அவன் மீது மோதவில்லை ஏன்?

ஏனென்றால் இந்த நிகழ்வு நடந்தது நண்பகலில்.